**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 88/2024 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | கோபால் |
| Father Name | : | குமார் |
| Village | : | காங்கேயம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 35 |

**Both Accused Present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது காங்கேயத்தில் குடியிருந்து வருகிறேன். திருப்பூர் – காங்கேயம் சிவசக்தி விநாயகர் கோவில் அருகே எனது அண்ணா மற்றும் அண்ணி இட்லி கடை வைத்து நடத்தி வருகிறார். கடந்த 26.11.2023 ஆம் தேதியன்று ஆஜர் எதிரிகள் எனது அண்ணியிடம் ஆம்புலட் போட்டு விற்க கூடாது என்று சொல்லியுள்ளார். எதற்காக இப்படி சொல்கிறீர்கள் என்று எனது அண்ணி கேட்க அதற்கு ஆஜர் எதிரிகள் கண்டாரோலி என்று எனது அண்ணியை தகாத வார்த்தைகளால் பேசியுள்ளார்கள். பின்னர் ஆஜர் எதிரிகள் எனது அண்ணியின் கையை இழுத்து அதன் காரணமாக விழுந்ததில் அவருக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டு காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். பின்னர் அடுத்த நாள் காங்கேயம் காவல் நிலையம் சென்று எனது அண்ணி புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.17 18:14:33 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 88/2024 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | அரவிந்தன் |
| Husband Name | : | செந்தில்குமார் |
| Village | : | காங்கேயம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 34 |

**Both accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது காங்கேயத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 26.11.2023 ஆம் தேதியன்று தள்ளு வண்டிகடையில் ஆம்புல்ன்ட் போட கூடாது என்று பிரச்சனை ஏற்பட்டது சம்பந்தமாக அடுத்த நாள் காலை சுமார் 11.30 மணியளவில் போலீசார் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் தனபால் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

கீதா, சவுந்தர்ராஜன் எனக்கு பழக்கமான நபர் என்றால் அ.சா.2 கோபல் எனக்கு பழக்கமான நபர் ஆவார்.கோபால் எனக்கு பழக்கமான நபர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்த கையொப்பம் செய்துவிட்டு

தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.17 18:14:42 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 88/2024 |
| Deposition of Witness | : | PW– 4 |
| Name | : | ஜனனி |
| Husband Name | : | கைலாஷ் |
| Village | : | திருப்பூர் |
| Taluk | : | திருப்பூர் |
| Age | : | 30 |

**Both Accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 17.11.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூர் மெடிக்கல் பார்மேஷன் மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.11.2023 ஆம் தேதி நான் காங்கேயம் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்தபோது திருமதி.கீதா (32) மதிக்கத்தக்க பெண் அடையாளம் தெரிந்த சதீஸ் மற்றும் அடையாளம் தெரியாத நபர் இருவர்கள் அடித்ததாக மருத்துவமனைக்கு வந்திருந்தார். நான் மருத்துவமனையில் அவர்களுக்கு சிகிச்சை அளித்தேன். பரிசோதித்து பார்த்தபோது அவரின் வலது புற தோள்பட்டையில் வலி இருந்ததாக கூறினார். வெளிப்புற காயங்கள் எதுவும் இல்லை. மேல் சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரிக்கு செல்ல பரிந்துரைத்தேன். பின்னர் அவர் மேல் சிகிச்சைக்காக அங்கு செல்லவில்லை. எனவே காயத்தின் இயல்பு குறித்து கூற இயலவில்லை.

**குறுக்கு விசாரணை**

நான் சிகிச்சை அளித்த கீதா என்பவருக்கு கன்றிய காணங்களோ, வெளிப்புற காயங்களோ, இரத்தக்காயங்களோ இல்லை என்று சொன்னால் சரிதான். சிராய்ப்பு காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான். என்னிடம் சிகிச்சைக்கு வந்த நபர் நல்ல நிலைமையில் இருந்தார் என்றால் சரிதான். மேல் சிசிச்சைக்கு அரசு மருத்துவமனை திருப்பூர்க்கு செல்ல பரிந்துரைத்தேன்

என்றால் சரிதான். ஆனால் அவர் அங்கு சிகிச்சைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். அவர் எந்தவித X Ray வும் எடுத்துக்க வில்லை என்றால் சரிதான். ஒருவர் வலி இல்லாமல் கூட வலி இருப்பதாக சொல்லலாம் என்றால் சரிதான். அதை நாங்கள் கண்டுபிடிக்க இயலாது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2025.11.17 18:14:49 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்